**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.174/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Valarmathi | Prosecution | P.W-1, L.W-1 |
| Husband Name | Raja | Defence | |
| Village | South Street, Keelaveli, Sattainathapuram | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 45 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **21.03.2023.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் எனது ஊர்க்காரரர்கள். 04.05. 2005 ஆம் ஆண்டு கடந்த ஆண்டு இரவு 8.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது என் மருமகள் கொல்லைக்கு போயிருந்தார் அங்கு அய்யப்பன் ஜட்டியுடன் நிற்கிறார் என்று பார்த்துவிட்டு என்னிடம் வந்து என் மருமகள் கூறினார். நான் அய்யப்பனிடம் ஏன் இவ்வாறு நிற்கிறாய் என்று கேட்டதற்கு குச்சிக்காரி, தேவடியா மகளே என்று அசிங்கமாக திட்டி எனது வீட்டு வாசலுக்கு அமிர்தம், கலியன், அய்யப்பன், மாலதி ஆகியோர் என்னையும் எனது மகனையும் மூங்கில் கட்டை கழியால் எனது மகனை அடித்தார்கள். எனது முடியை பிடித்து சுவற்றில் தள்ளினார்கள். எனக்கு முதுகிலும், தலையிலும் ஊமைக்காயம் ஏற்பட்டது. எனது மகனுக்கு கைவிரல் முறிந்துவிட்டது, வயிற்றிலும் காயம் ஏற்பட்டது, விலாவில் வலி ஏற்பட்டது. எனது மருமகளையும் இந்த வழக்கு எதிரிகள் அடித்ததில்அவருக்கும் காயம் ஏற்பட்டது. நான் எனது மகன், மருமகள் ஆகியோர் சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம் அங்கு சீர்காழி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது வைத்தீஸ்வரன் கோயில் போலிசார் விசாரித்து வாக்குமூலம் பெற்று என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அதை போலிசார் படித்துக்பாடினார்கள் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அந்த **புகார் வாக்குமூம் அ.ச.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் சீர்காழி அரசு மருத்துவமனையில்

சிகிச்சையில்இருந்தபோது எதிரிகள் எங்களிடம் வந்து பிரச்சனை செய்தார்கள் நாங்கள் மூவரும் 10 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளில் இருவர் ஆஜராகியும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.174/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Vinothkumar | Prosecution | P.W-2, L.W-2 |
| Father Name | Raja | Defence | |
| Village | South Street, Keelaveli, Sattainathapuram | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **21.03.2023.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து ஓட்டுனராக வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும், ஆஜர் ஆகாத கலியன், அம்சம் ஆகிய எதிரிகளையும் தெரியும் எனது பக்கத்துவீட்டுக்கார்கள்.08.05.2022 ஆம் தேதி இரவு 8 மணியளவில் நான் கடைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தபோது எனது வீட்டின் பின்புறம் சத்தம் கேட்டது நான் சென்று பார்த்தபோது அய்யப்பன் எனது அம்மாவை அடித்துக்கொண்டிருந்தார் அப்போது என்ன பிரச்சனை என்று என் மனைவியிடம் கேட்டபோது அய்யப்பன் கொல்லைபுறத்தில் ஜட்டியுடன் நின்றுறிந்தார் அதை கேட்டதற்கு பிரச்சனை செய்கிறார் என்று கூறிக்கொண்டிருந்தபோதே அய்யப்பன் என்னை குச்சிக்காரி தேவடியா மகனே என்று திட்டினார். கலியன், அய்யப்பன் இருவரும் கட்டை கழியை எடுத்துவந்து எனது வலது கையில்அடித்துவிட்டார்கள் அதில் எனக்கு உள்காயம் ஏற்பட்டது. மாலதியும் அம்சமும் என் மனைவியை முடியை பிடித்து இழுத்து கையால் அடித்தார்கள். அங்கிருந்தவர்கள் அவர்களை விலக்கிவிட்டாரகள் நாங்கள் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சிசிச்சைக்கு சென்றோம் அங்கு சிகிச்சையில் இருந்தபோது வைத்தீஸ்வரன் கோயில் போலிசார் விசாரித்து என் அம்மாவிடம் வாக்குமூலம் பெற்று கையெழுத்து வாங்கினார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளில் இருவர் ஆஜராகியும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.174/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | கல்பனா | Prosecution | P.W-3, L.W-3 |
| Husband Name | Vinothkumar | Defence | |
| Village | South Street, Keelaveli, Sattainathapuram | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 24 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **21.03.2023.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டிக்குடித்தனம் செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும், ஆஜர் ஆகாத கலியன், அம்சம் ஆகிய எதிரிகளையும் தெரியும் எனது பக்கத்துவீட்டுக்கார்கள். 08.05.2022 ஆம் தேதி இரவு 8 மணியளவில் நான் கொல்லைப்புறம் சென்றபோது மது அருந்திவிட்டு அய்யப்பன் ஜட்டியுடன் நின்று என்னைப் பார்த்து சிறித்துக்கொண்டிருந்தார். அய்யப்பன் நிற்பதை எனது மாமியாரிடம் நான் சொன்னேன் என் மாமியார் அய்யப்னிடம் ஏன் இவ்வாறு நின்று சிறித்துக்கொண்டிருக்கிறாய் என்று கேட்டார் அய்யப்பன் என் மாமியாரை குச்சிகாரி மகனே, தேவடியா மகனே என்று அசிங்கமா திட்டி எனது மாமியார் முடியை பிடித்து இழுத்து சுவற்றில் நெஞ்சில் கைவைத்து தள்ளிவிட்டார். பின்னர் எனது கணவர் மேற்படி சம்பவம் குறித்து கேட்டபோது அவரையும் அய்யப்பன், கலியன், மாலதி ஆகிய மூவரும் கட்டையால் எனது கணவரை கையில்அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். மாலதி என்னை கீழே தள்ளவிட்டார். அம்சம் எனது மாமியாரை முடியை பிடித்து இழுத்து கையால் அடித்தார். நாங்கள் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம் அங்கு சிகிச்சையில் இருந்தபோது வைத்தீஸ்வரன் கோயில் போலிசார் விசாரித்து என் மாமியரிடம் வாக்குமூலம் பெற்று கையெழுத்து வாங்கினார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளில் இருவர் ஆஜராகியும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.174/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Raja | Prosecution | P.W-4, L.W-4 |
| Father Name | Govindharaj | Defence | |
| Village | South Street, Keelaveli, Sattainathapuram | Taluk | Sirkali |
| Calling | | Religion | |
| Age | 65 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **21.03.2023.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்துவருகிறேன். அ.சா.1 எனது மனைவி, அ.சா.2 எனது மகன், அ.சா.3 எனது மருமகள். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும், ஆஜர் ஆகாத கலியன், அம்சம் ஆகிய எதிரிகளையும் தெரியும் எனது பக்கத்துவீட்டுக்காரர்கள். 08.05.2022 ஆம் தேதி இரவு 8 மணியளவில் நான் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து பார்த்தபோது எதிரிகள் எனது மனைவியையும், மகளையும், மருமகளையும் அடித்து பிரச்சனை செய்து சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டதாக கேள்விபட்டேன். நான் அங்கு சென்று பார்த்தபோது எனது மனைவி பேச இயலாத நிலையில் இருந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளில் இருவர் ஆஜராகியும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.